**எம்.சி.ஓ.பி. எண்: 471/2024**

The Witness sweared under Oaths Act 1969 on this the day of 14th day of November 2025
ம.சா.2, ஆஷா, த/பெ. முருகன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த விபத்தில் இறந்த முருகன் என்பவர் எனது தந்தை ஆகும். 2ம் மனுதாரர் எனது தாயார், 4 மற்றும் 5 மனுதாரர்கள் என் உடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான். எனது தந்தை சைக்கிள் ரிக்ஷா ஓட்டுனர் ஆவார். சைக்கிள் ரிக்ஷா ஓட்டுனர் சங்கத்தில் எனது தந்தை உறுப்பினர் கிடையாது. இந்த விபத்தானது மாலை சுமார் 5.30 மணிக்கு நடைபெற்றது என்றால் சரிதான். எங்களுக்கு சொந்த ஊர் முருகாபாடி ஆகும். இந்த விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. எனது தந்தை எதற்காக சைக்கிள் ரிக்ஷாவில் சென்றார் என்ற விவரம் எனக்கு தெரியாது. எனது தந்தையின் வயது மற்றும் வருமானம் மாதம் ரூ.15,000/– சம்பாதிக்கிறார் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கு திருமணம் ஆகவில்லை. 4ம் மனுதாரர் அப்புவிற்கு திருமணம் ஆகி அவர் தனது குடும்பத்துடன் தனியாக இருக்கிறார் என்றால் சரிதான். நான் வேலைக்கு செல்லவில்லை. வீட்டில் தான் இருக்கிறோம். 4ம் மனுதாரர் அப்பு கட்டிட கட்டுமான வேலை பார்த்து அவர் வருமானத்தில் தனது குடும்பத்தை கவனித்து வருகிறார் என்றால் சரிதான். 5ம் மனுதாரர் கண்ணன் விவசாயம் கூலியாக வேலைக்கு செல்வார். நானும் எனது சகோதரர்களும் எனது தந்தையின் வருமானத்தை நம்பி இருக்கவில்லை என்றால் நான் அவர் வருமானத்தில் வாழ்ந்தேன். எனது தந்தைக்கு சுகர், பீபி இருந்தது என்றால் சரியல்ல. விபத்து நடந்த மாலை பொழுதில் எனது தந்தைக்கு சுகர், பீபி ஆகியவற்றால் தடுமாறி 2ம் எதிர்மனுதாரர் பேருந்தில் மோதி இந்த விபத்தை ஏற்பட்டது என்றால் சரியல்ல. விபத்து எனது தந்தையின் கவனக்குறைவால் ஏற்பட்டது என்பதால் இந்த 2ம் எதிர்மனுதாரர் விபத்திற்கு பொருப்பு இல்லை என்றும் அதனால் எங்களுக்கு இழப்பீடு கொடுக்க கடமைபட்டவர் அல்ல என்றால் சரியல்ல. நாங்கள் இந்த வழக்கில் அதிகம் இழப்பீடு கோரியுள்ளோம் என்றும் அது எங்களுக்கு கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது. மறு விசாரணை இல்லை.**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்<br><br>Sd/– S. Senthilbabu,<br><br>சார்பு நீதிபதி.<br>போளூர். |